1979 மார்ச் 20] [பேரவைத் துணைத் தலைவர்]

இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது ஒழுங்குப் பிரச்னை இருந்தால் எழுப்ப வேண்டுமே தவிர, ஒவ்வொருவரும் கொடுத்ததைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தால் வேறு அலுவல்களுக்கு எப்பொழுது போவது, எப்படி நடத்துவது ? (குறுக்கீடு) (திரு. ரா. கிருஷ்ணன், திரு. துரை கலியமூர்த்தி ஆகியவர்கள் எழுந்தார்கள்). உறுப்பினர்கள் அனைவரும் தயவு செய்து உட்கார வேண்டும். இப்பொழுது மணி 11-30 ஆகப்போகிறது. நீங்கள் கொடுத்தது இன்றைக்கு வரவில்லை என்றால், நாளைக்கு, நாளை மறுநாள் என்று வரும். எனவே, உட்காருங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : நான் சொல்வது வேறு விஷயம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம். திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசியதை நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதை அனுமதிக்க முடியாது.

(3) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979—80—ஆம் ஆண்டின் செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1979–80 as detailed in the annexure enclosed."

(முற்பகல் 11-30)

(6) 1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து. 1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.